1981 மார்ச் 28]

கடைகளின் மூலமாகவும் பங்கீடு செய்வதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம். அப்படிப் பங்கீட்டுக் கொடுக்குபோது ஒருவருக்கு 2 கிலோ தான் கொடுக்க வேண்டும் என்று வரையறுத்திருக்கிறோம். சில பேர்கள் அதிகமாக வாங்கிப்போய் கலப்படம் செய்வதனால் ஒருவருக்கு, ஒரு குடும்பக் கார்டுக்கு 2 கிலோ தான் கொடுக்கவேண்டும் என்று கட்டுப்பாட்டை ஏற்படுத்தி இருக்கிறோம். எந்த இடத்திலும் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்படுமானால், இருக்கிற எண்ணெயை பகிர்ந்து கொடுப்பதற்கு முயற்சியை அரசு மேற்கொள்ளும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, பாமாலின் ஆயில் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப் படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் உள்ள ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு கிலோ 6·25-க்கு வாங்கி ஏறத்தாழ சுமார் 8·25-க்கு விற்கப்படுகிறது. ஆனாலும் ரேஷன் கார்டுகளுக்குக் கிடைப்பதில்லை என்று பரவலாக பேசப்பட்டுவருகிறது. அதே நேரத்தில் அந்தக் கடைகளிலே இருந்து தனியார் கடைகளுக்கு அந்த எண்ணெய் விற்கப்பட்டு அங்கே கிலோ 16 ரூபாய் வரையிலும் விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா? அதைத் தடுக்க அரசு தீவிரமாகக் கண்காணித்து நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த பாமாலின் எண்ணெய் இப்போது பொதுமக்கள் புழங்குகின்ற அளவிற்கு வந்திருப்பதால், அந்தப் பரவலாக நியாய விலைக் கடைகளின் மூலம் தருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிலபல குறைபாடுகளைப் பற்றிச் சொன்னார்கள். அவைகளை எல்லாம் கண்காணித்து கட்டுப்படுத்தக் கூடிய நிலை இருக்கின்றது. அவைகளை மேற்பார்வையிட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு இருக்கிறோம். ஆகவே ஒரு குடும்பக் கார்டுக்கு 2 கிலோ தான் தரவேண்டும். அதையும் மீறியோ அதிக விலைக்கோ விற்பதைக் கட்டுப்படுத்தவும், நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலை குறிப்பிட்ட இடத்தில் இருக்குமானால், உறுப்பினர்கள் அதைச் சுட்டிக் காட்டினால் அதுபற்றிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக மேற்பார்வையிட்டு, வெளியிடங்களில் விற்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தும் கூட அதை மீறினால் அதற்கான நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வருகிறோம்.

கள்ளச் சந்தையில் சீனி விற்பனை.

*வினா எண். 417—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம், திருவில்லிப்புத்தூர் கூட்டுறவு பண்டகசாலை, மம்சாபுரம் கூட்டுறவு பண்டகசாலைகளில் பொது

மக்களுக்கு வழங்கப்படவேண்டிய சீனியை வழங்காமல் கள்ளச் சந்தையில் விற்பதாக 10—9—80, 23—10—80 தேதிகளில் அரசுக்கு புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நிர்வாகிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம் 28—10—1980-ம் நாளிட்ட புகார் ஒன்று அரசுக்கு வந்துள்ளது.

(ஆ) புகார்களைக் கவனமாக ஆய்வு செய்த இராமநாதபுர மாவட்ட ஆட்சியர், அந்தக் கூட்டுறவுகளின் தலைவர்கள், இயக்குநர்கள், மற்றும் விற்பனையாளர் இவர்கள் மீது தக்க நீதி மன்றத்தில் வழக்கு தொடருமாறு ஆணை பிறப்பித்துள்ளார்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, இப்படிக் கூட்டுறவுப் பண்டகசாலைகளின் தலைவர்களாக இருக்கக் கூடியவர்கள் ஒன்று அரசியல் கட்சியின் மெம்பர்களாக இருக்கிறார்கள், அல்லது ஜாதியின் பெயரை வைத்து சொந்தபந்தம் கொண்டாடி, அரசு நடவடிக்கை எடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். குற்றச்சாட்டுகளின் பேரில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு நம் நாட்டில் சட்டவிதிகள் இல்லாமல் இருக்கிறதா?

* * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்விக்குத் தொடர்பாக துணை வினாக்களைக் கேட்க வேண்டும். திரு. தாமரைக்கனி * * * * என்று கூறிய பகுதி நீக்கப்படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர்களே இப்படி சீனி கடத்தல், பதுக்குதல், கள்ள வாணிபம் செய்பவர்களுக்கு கடுமையான முறையில் தண்டனை கொடுக்கத்தக்க அளவுக்குச் சட்டம் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு பண்டகசாலை பற்றியும், மம்சாபுரம் கூட்டுறவு பண்டகசாலை பற்றியும் புகார் வந்துள்ளது. அந்தப் புகார் பற்றி விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆகவே தவறு செய்வது என்பதும் நல்லது செய்வது என்பதும் அவரவர்களுடைய தனிப்பட்ட இயல்பைப் பொருத்து இருக்கிறதேதவிர, ஒரு கட்சியோடு தொடர்புபடுத்துவதோ, அல்லது ஒரு ஜாதியோடு

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 மார்ச் 28]

தொடர்புபடுத்துவதோ பொருந்தாது. அது தனிப்பட்ட முறையிலே எல்லா நிலைகளிலும் இருக்கக்கூடும். ஆனால் அங்கே ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவுப் பண்டகசாலையில் சர்க்கரை விநியோகத்தில் சில முறைகேடுகள் நடைபெற்றுள்ளது என்பதை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி செய்தார். இக்குற்றங்களுக்குப் பொறுப்பான கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர், இயக்குநர்கள் மற்றும் விற்பனையாளர்கள் ஆகியோர் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடர ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் மீது மேல் நடவடிக்கை கவனிக்கப்பட்டு வழக்குத் தொடருவதற்கான முயற்சிகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதே போன்று ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம் மம்சாபுரம் கூட்டுறவுப் பண்டகசாலையிலே சர்க்கரை விநியோகத்தில் முறைகேடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஜூலை, ஆகஸ்டில் குடும்ப அட்டைதாரர்களுக்கு, முறையாக வழங்குகின்ற அளவுக்கு அதிகமாக சர்க்கரை விநியோகம் செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையிலேயே கள்ளச்சந்தையில் விற்கப்பட்டு இருக்கின்றது. மேலும் சில அட்டைதாரர்களுக்கு சர்க்கரை விநியோகம் செய்ததாக தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் மீதும், தலைவர் மீதும், இயக்குநர்கள் மீதும், விற்பனையாளர்கள் மீதும் தண்டனை கிடைக்கத்தக்க அளவுக்கு வழக்குத் தொடுக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இவைகள் எல்லாம் முறையாக நடைபெற்று வருகின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, சீனி அதிகமாகச் சாப்பிடுவதால் சர்க்கரை வியாதி நிறைய பேர்களுக்கு வருவதாகச் சொல்கிறார்கள். ஆகவே, சர்க்கரை குறைவாகச் சாப்பிடுவதற்காக மக்களிடையே பிரச்சாரம் செய்யப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மூலக் கேள்வியை ஒட்டியது அல்ல. மூலக்கேள்வி கள்ளச்சந்தையில் சீனி விற்பது பற்றியதாகும்.

குடியாத்தம் நகரில் தீப்பெட்டித் தொழில் ஆரம்பிக்கும் திட்டம்.

*வினா எண். 526—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் நகரில் ஆயிரக்கணக்கானவர் ஈடுபட்டுள்ள தீப்பெட்டித் தொழிலை அரசு துறையிலோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?